பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 08 2024 6 30
சனிக்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.
2. ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்கள் பயன்பெறும் அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.
3. பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் சேரும் மாணவர்களிடம் கல்லூரி நிர்வாகங்கள் கட்டணங்களை வசூலிக்கக்கூடாது என்று மாநில தொழில்நுட்ப கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.
4. கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து மீண்டும் அதிகரித்துள்ளது,
5. தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கொல்கத்தாவில் பெண் பயிற்சி மருத்துவர் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து இந்திய மருத்துவ சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட மருத்துவர்கள் கூட்டமைப்பினர் புதுதில்லியில் இன்று மத்திய சுகாதார அமைச்சக அதிகாரிகளை சந்தித்து பேசினர்.

அப்போது பணியிடங்களில் மருத்துவர்களுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் குறித்து தங்கள் கவலையை தெரிவித்தனர்.

இதையடுத்து மருத்துவர்கள் மற்றும் அது சார்ந்த பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும் என்று சுகாதார அமைச்சக அதிகாரிகள் உறுதியளித்தனர்.

பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை பரிந்துரைக்க குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மாநில அரசுகளும் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று அவர்கள் அறிவுறுத்தினர்.

சுகாதார பணியாளர் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை 26 மாநிலங்கள் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டில் டெங்கு மற்றும் மலேரியா பாதிப்புகள் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு பொதுநலன் கருதி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள் அதை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டுமென்று சுகாதாரத்துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

இதனிடையே கொல்கத்தா பெண் பயிற்சி மருத்துவர் கொலை செய்யப்பட்தை கண்டித்து நாடு முழுவதும் இன்று மருத்துவர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகத்தில் சில மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பொதுமக்கள் நலன் கருதி கருப்பு பேட்ஜ் அணிந்து பணியில் ஈடுபட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

[]<<<>>>[]

ஈரோடு, திருப்பூர், கோவை மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டுள்ள அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து 16 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த திட்டத்தின் மூலம் 24 ஆயிரத்து 468 ஏக்கர் நிலம் பாசன வசதிபெறும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நீர்வளத்துறையின் 32 ஏரிகள், ஊராட்சி ஒன்றியத்தின் 42 ஏரிகள் மற்றும் தொள்ளாயிரத்து 71 குளம் குட்டைகள் என மொத்தம் ஆயிரத்து 45 நீர்நிலைகளில் இதன் மூலம் நீர் நிரப்பபப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

பவானி ஆற்றின் காளிங்கராயன் அணைக்கட்டின் கீழ்புறத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ஒன்று புள்ளி ஐந்து பூஜ்ஜியம் டி எம் சி உபரி நீரை வினாடிக்கு 250 கன அடி வீதம் 70 நாட்களுக்கு நீரேற்று முறையில் ஆயிரத்து 65 கிலோமீட்டர் தூரத்திற்கு நிலத்தடி குழாய் மூலம் பாசன நிலங்களுக்கு நீர் விநியோகம் செய்யப்படும் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டில் கலந்தாய்வின் மூலம் சேர்க்கை பெற்றுள்ள மாணவர்களிடம் கட்டணங்கள் எதையும் கல்லூரி நிர்வாகங்கள் வசூலிக்கக்கூடாது என்று தொழில்நுட்ப கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது.

இது குறிதது இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு பள்ளிகளில் படித்து பொறியியல் கல்லூரிகளில் ஏழு புள்ளி ஐந்து சதவீத அரசு ஒதுக்கீட்டில் சேரும் மாணவர்களின் கல்வி செலவினங்களை அரசே வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேபோல் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் தொழிற் கல்லூரிகளில் கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெற்றுள்ள முதல் பட்டதாரி மாணவர்களுக்கான கல்விக் கட்டணச்

சலுகை வழங்கப்படும் கூறப்பட்டுள்ளதையும் தொழில்நுட்ப கல்வி இயக்ககம் அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்த மாணவர்களிடம் அனைத்து கட்டணங்களையும் செலுத்த வற்புறுத்தப்படுவதாக புகார்கள் பெறப்பட்டுள்ள நிலையில், இத்தகைய செயல்களில் ஈடுபடும் பொறியியல் கல்லூரிகளின் நிர்வாகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தொழில்நுட்ப கல்வி இயக்ககம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

பிரதமர் வீட்டு வசதி திட்ட நிதியில் முறைகேடு செய்ததாக கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 13 அரசு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி திரு டி கிருஷ்ணகுமார், நீதிபதி திரு பி பி பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதிகாரிகள் கையாடல் செய்த பணத்தை வசூலிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசு வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதனை பதிவு செய்த நீதிபதிகள், முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், இந்த மனு மீது எந்த உத்தரவும் பிறப்பிக்க அவசியமில்லை என கூறி வழக்கை முடித்து வைத்தனர்.

**[]<<<>>>[]**

நாட்டிலேயே முன்னோடியாக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பாத சிகிச்சை மையம் செயல்பட்டு வருவதாக அந்த மருத்துவக் கல்லூரியின் தலைவர் டாக்டர் பாலாஜிநாதன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய அலுவலர்களுக்கான பயிலரங்கை தொடங்கி வைத்து பேசிய அவர், மாநிலத்தில் உள்ள இரண்டாயிரத்து 336 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாத பராமரிப்பு சிகிச்சை அளிக்கும் வகையில் இந்த பாத சிகிச்சை மையம் செயல்பட்டு வருவதாகக் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பாலாஜிநாதன் ) --40--- செகண்ட்*

**[]<<<>>>[]**

காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக கர்நாடக அணைகளிலிருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து மீண்டும் அதிகரித்துள்ளது,

இன்று மாலை நிலவரப்படி வினாடிக்கு 26 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - தண்டபாணி ) -40-- செகண்ட்*

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

அடுத்த 24 மணி நேரத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி உள்ளிட்ட தென்மாவட்டங்களில், உள்மாவட்டங்களில் ஒரு சில பகுதிகளிலும் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

*( சவுண்ட்பைட் - செ க )  -50--- செகண்ட்*

**[]<<<>>>[]**

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரி மலையில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணிகளை மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு க ராமச்சந்திரன் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடைபெறவுள்ளதை அடுத்து இந்து அறநிலையத்துறையின் முதன்மை செயலர் திரு சந்திரமோகன் தலைமையில் அனைத்துத்துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டத்தில் கல்லூரி மாணவ மாணிவிகள் பங்கேற்ற தீண்டாமை ஒழிப்பு மற்றும் பாலியல் குற்றங்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற உடல் தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், உடல் தானம் செய்த குடும்பத்தினருக்கு ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டம் கொடைக்கானலில் போதை காளான் விற்பனையில் ஈடுபட்ட மற்றும் அதனை வாங்க முயன்றவர்களை காவல்துறையினர் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவி பகுதியில் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இன்று திடீர் சோதனை மேற்கொண்டனர்.

**[]<<<>>>[]**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியின் தொடக்க விழா அணிவகுப்பில் இந்தியா சார்பில் தேசியக்கொடியை **Sumit Antil, Bhagyashree Jadhav** ஆகியோர் ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் வரும் 28ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 8ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.

இந்தியாவின் சார்பில் இதுவரை இல்லாத அளவாக 84 பேர் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் இறுதியாட்டத்திற்கு முன்னேறி தகுதி நீக்கம் செய்யப்பட்ட இந்தியாவின் வினேஷ் போகத் இன்று புதுதில்லி திரும்பினார்.

விமான நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

***End of News***